பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 03 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்காவின் திரு. **Lex Fridman** உடன் நடத்திய கலந்துரையாடல், இன்று மாலை ஐந்தரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. நாட்டின் முதலாவது செமிகண்டக்டர் சிப், இந்த ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. கிரையோஜெனிக் எஞ்சினில் பயன்படுத்தப்பட உள்ள புதிய தொழில்நுட்பம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

4. மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதிமன்றங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி கோப்பையை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்காவைச் சேர்ந்த கணினி நிபுணரும், ஊடகவியலாளருமான திரு. **Lex Fridman** உடன் நடத்திய **PodCast** கலந்துரையாடல் இன்று மாலை ஐந்தரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இந்த நிகழ்ச்சியை நாட்டு மக்கள் அனைவரும் தவறாது கேட்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு. **Lex Fridman** உடனான தமது கலந்துரையாடல் மிகவும் சுவாரஸ்யமானது என்றும், தமது குழந்தைப் பருவம் முதல் இமயமலையில் தங்கியிருந்தது மற்றும் தமது பொது வாழ்க்கை குறித்த பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி உடனான இந்த 3 மணி நேர கலந்துரையாடல், தமது வாழ்நாளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று திரு. **Lex Fridman** கூறியுள்ளார்.

*<<<<>>>>*

உள்நாட்டில் தயாரிக்கப்படும் முதலாவது செமிகண்டக்டர் சிப், இந்த ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சென்னை ஐஐடி-யில் மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 4 சிப்-கள் வெளியாகும் என்றும், இவை டெஸ்லா, **Volkswagen** உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வேளாண் தொழிலுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளதாகவும், மகாராஷ்டிரா மாநிலம் இதனை வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அறிவாற்றல் மிக்க இளைஞர்கள் அனைத்து துறைகளுக்கும் தேவையான தரவுகளை உருவாக்கும் திறன் பெற்றவர்களாக உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

**Deep Fake** போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அளிப்பதற்கான நெறிமுறைகள் விரைவில் வகுக்கப்படும் எனவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

முன்னதாக ஐஐடி. வளாகத்தில் உள்ள புத்தாக்க மையத்தின் கண்காட்சியை திரு. அஸ்வினி வைஷ்ணவ் பார்வையிட்டார்.

இந்த கண்காட்சியில் இடம்பெற்ற புதிய கண்டுபிடிப்புகளுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கேடயங்களை வழங்கிப் பேசிய அவர், இதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

<<<>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் காரைக்கால் அகில இந்திய வானொலி நிலையத்தில் நேற்று ஆய்வு செய்தார்.

அங்குள்ள பண்பலை வானொலி நிலையத்தை பார்வையிட்ட அவர், அங்கு பணிபுரியும் நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும் காரைக்கால் வானொலி நிலைய வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் திரு. எல். முருகன் நட்டு வைத்தார்.

<<<>>>>

கிரையோஜெனிக் எஞ்சினில் பயன்படுத்தப்பட உள்ள புதிய தொழில்நுட்பம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ மையத்தில் நடத்தப்பட்ட இந்த சோதனையை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன், சந்திரயான்-5 திட்டத்தை இந்தியாவும் - ஜப்பானும் கூட்டாக மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவித்தார்.

<<<>>>>

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையால் நடத்தப்படும், வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளையோர் நாடாளுமன்றம்-2025 நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு பெயர்களைப் பதிவு செய்ய இன்று கடைசி நாளாகும்.

NCC, NSS மாணவர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க தன்னார்வலர்கள் mybharat இணையதளத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்யலாம்.

இந்தப் பதிவுடன் வளர்ச்சியடைந்த பாரதம் குறித்து தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட, 25MB அளவுக்கு மிகாத ஒரு நிமிட காணொலி ஒன்றையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இந்த காணொலி அடிப்படையில் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அதன் பின் வரும் 18ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை சென்னை, மதுரை, திருச்சி, கோவை உள்ளிட்ட 15 மையங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறும் என்று மத்திய இளைஞர் நலத்துறையின் மண்டல இயக்குநர் திரு. சாமுவேல் செல்லையா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதிமன்றங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் 75வது ஆண்டுவிழா மற்றும் சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் 160வது ஆண்டு விழா உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர், இந்தியாவை மதச்சார்பற்ற குடியரசாக நீடிக்கச் செய்வதில் அரசியல் சாசனம் உயிர்ப்புடன் இருப்பதாக கூறினார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதிலும், சமூக நீதியைப் பாதுகாப்பதிலும் வழக்கறிஞர்களின் பங்களிப்பை அவர் பாராட்டினார்.

திமுக ஆட்சிக் காலத்தில் நீதிமன்றங்களுக்கான பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், வழக்கறிஞர்களுக்கான சேமநலநிதி உயர்த்தப்பட்டிருப்பதையும் திரு. மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற நீதிபதி திரு. எம்.எம். சுந்தரேஷ், தமிழர்களின் நீதி பரிபாலனத்தின் அடையாளமாக சிலப்பதிகாரம் திகழ்கிறது என்றார்.

தற்போது மாறிவரும் சட்டங்களுக்கு ஏற்ப வழக்கறிஞர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

கோடை வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதநீர் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ஒரு லிட்டர் பதநீர் 100 ரூபாய்க்கு விற்பனையாவது விவசாயிகளுக்கு லாபம் தருவதாக அமைந்துள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாயும், யுக்ரைனும் நேற்றிரவு நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரோன்களை வீசி பரஸ்பர தாக்குதல் நடத்தியுள்ளன.

------------

காவல்துறையினருக்கான அகில இந்திய குதிரையேற்றப் போட்டிகள் ஹாரியானாவில் நேற்று தொடங்கியது.

------------

விழுப்புரத்தில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. பொன்முடி, திரு. சி.வி. கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

------------

நாகப்பட்டினத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையமும், மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் இணைந்து நடத்திய தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

------------

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளையும் தக்காளிக்கு போதிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 25 ஆயிரம் மாணவிகள் ஒரே நேரத்தில் காவல் உதவி செயலியை பதிவிறக்கம் செய்துள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிபாளர் திரு. ராஜேஷ் கண்ணன் தெரிவித்துள்ளார்.

------------

சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள மதி அனுபவ அங்காடியை மாநில தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி கோப்பையை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற தில்லி அணிக்கு எதிரான இறுதிப் பேட்டியில் முதலில் விளையாடிய மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 149 ரன் எடுத்தது.

கேப்டன் ஹர்மன் ப்ரீத் கவுர் 44 பந்துகளில் 66 ரன் எடுத்து அணிக்கு வலு சேர்த்தார்.

பின்னர் 150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தில்லி அணி, 9 விக்கெட் இழப்புக்கு 141 ரன் மட்டுமே எடுத்தது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மும்பை அணி இரண்டாவது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

------------

ஜோர்டான் நாட்டின் அம்மானில் நடைபெற உள்ள சீனியர் ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்கும் 30 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**